Appendix IV.

[*Vide* answer to starred question No. 457 on page 598.]

In December 1960, representations were received by the Government from the ryots of Athoor, etc., through Sri M. S. Selvarajan, M.L.A., that the Dhrangadhra Chemical Works, Limited, Sahupuram, were storing brine water adjacent to wet fields, which affected the paddy crops and that, owing to the high level storage of saline water, excess salt was formed in the land due to seepage and that it was detrimental to the health of the paddy crop. They requested that arrangements might be made to shift the salt pans of the company, four furlongs east of the wet fields. The representations were examined by the Government in consultation with the Collector of Tirunelveli, the Director of Agriculture and the Board of Revenue. The Board of Revenue suggested that an effective distance of at least 1,000 feet between the cultivated fields and the salt pans was very essential, that a portion of the salt pans might be shifted to some other place to maintain that distance or in the alternative 10 feet deep impervious walls might be constructed. The Government accepted the recommendation of the Board of Revenue and issued orders requesting the Director of Agriculture to give clear notice to the Dhrangadhra Chemical Works Limited to the effect that it should carry out suitable remedial measures to prevent the damage to crops, unless it was prepared to pay compensation to the ryots concerned for loss and damages caused and likely to be caused in future. Accordingly the Director of Agriculture, Madras, has given notice to the management of M/s. Dhrangadhra Chemical Works, Limied to carry out suitable remedial measures, viz., either to leave an effective disance of at least 1,000 feet between the salt pans and the cultivated fields, and shift a portion of the salt pans to some other place to maintain this distance or to provide ten feet deep drains or construct ten feet deep impervious walls, failing which the management of the Company should be prepared to pay compensation to the ryots concerned for loss and damage caused to the paddy fields and likely to be caused in future.

2. The Dhrangadhra Chemical Works Limited has since reported to the Director of Agriculture that they have just taken up the work of modification in December, 1963 as per Government suggestion after the close of the previous salt season and that this work was expected to be completed in about another month's time before the commencement of the subsequent salt season. The Collector of Tirunelveli is watching the progress of the work. The final report from the Collector of Tirunelveli is awaited.

1960 டிசம்பரில் ஆத்தூர் முதலிய இடங்களைச் சேர்ந்த குடியான வர்கள் திரு. எம். எஸ் செல்வராஜன், எம்.எல்.ஏ. அவர்கள் மூலமாக அரசாங்கத்திற்கு முறையீடுகள் அனுப்பினர். சாஹு புரம் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிட்டெட் பக்கத்தில் உள்ள நன்செய் நிலங்களுக்கு அருகில் உப்பு நீரைத் தேக்கிவைத்துள்ள

[30th March 1964

தாகவும், இதனுல் நெற்பயிர் பாதிக்கப்படுவதாகவும், உப்பு நீர் அதிகமாகச் சேகரித்து வைக்கப்படுவதால், நீர்க்கசிவின் மூலம், நிலம் அதிகமாய் உப்பு கடித்து விடுவதாகவும், இது நெற் பயிர் வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கிறதென்றும் அந்த முறையீடு களில் தெரிவித்திருந்தனர். ஆகையால் கமபெனியின் உப்பளப் பாத்திகளை நன்செய் நிலங்களுக்குக் கிழக்கே நான்கு பர்லாங்கு தள்ளி அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமெனவும் அவர் கள் கேட்டுக்கொண்டனர். இந்த முறையீடுகளைத் திருநெல்வேலி கலெக்டர், வேளன்மைத்துறை டைரக்டர், ரெவின்யூ போர்டு இவர்களைக் கலந்து அரசாங்கம் பரிசீலனை செய்தது. விளைச்சல் நிலங்களுக்கும், உப்பளப் பாத்திகளுக்கும் இடையில் குறைந்தது 1,000 அடி இடைவெளியாகிலும் இருக்கவேண்டும் எனவும், இதற் காக உப்பளங்களில் சிலவற்றை வேறு இடத்திற்கு மாற்றலா மென்றும், அப்படியில்லாவிட்டால், தண்ணீர் கசியாத 10 அடி ஆழச் சுவர்களை எழுப்பலாமென்றும் ரெவின்யூ போர்டு கருதியது. ரெவின்யூ போர்டு கூறிய ஆலோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. பயிர்கள் சேதமடைவதைத் தடுக்க தகுந்த பரிகார ஏற்பாடுகளை த்ரங்கத்ரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிட்டெட் மேற்கொள்ளவேண்டுமென்றும், இல்லை என்ருல், சம்பந்தப்பட்ட குடியானவர்களுக்கு ஏற்பட்டுள்ள, இனி ஏற்படக்கூடிய நஷ்டத் திற்காகவும், சேதத்திற்காகவும் அவர்களுக்கு நஷ்ட ஈடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்றும் அந்தக் கம்பெனிக்குத் தெளிவாக அறிவிப்பு கொடுத்துவிடும்படி வேளாண்மைத்துறை டைரக் டருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. அதற்கேற்ப, வேளாண் மைத்துறை டைரக்டரும் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிட்டெடிற்கு அறிவிப்பு கொடுத்தார். அதாவது, விளைச்சல் நிலங்களுக்கும் உப்பளப் பாத்திகளுக்கும் இடையில் குறைந்தது 1,000 அடி இடைவெளியாவது இருக்கவேண்டும் என்றும், இந்த இடைவெளி இருப்பதற்காக உப்பளங்களில் ஒரு சிலவற்றை யாகிலும் வேறு இடங்களுக்கு மாற்றவேண்டும் எனவும், அப்படி யில்லாவிட்டால் 10 அடி ஆழ வடிகால்கள் அல்லது 10 அடி ஆழச் சுவர்கள் கட்டவேண்டும் என்றும், இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட குடியானவர்களுக்கு ஏற்பட்டுள்ள, இனி ஏற்படக்கூடிய நஷ்டத் திற்காகவும், சேதத்திற்காகவும் அவர்களுக்கு அக் கம்பெனி நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் எனவும் அந்த அறிவிப்பில் கண்டிருந்தது.

2. த்ரங்கத்ரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட் வேளாண்மைத் துறை டைரக்டருக்கு இப்போது ஓர் அறிக்கை அனுப்பியுள்ளது. அரசாங்கம் சொல்லியுள்ளபடி 1963 டிசம்பரில், முந்திய உப்பளப் பருவம் முடிந்த பிறகு மேற்படி அறிவிப்பில் சிபாரிசு செய்துள்ள வேலையை மேற்கொண்டதாகவும், அந்த வேலை ஏறக்குறைய இன்னும் ஒரு மாதத்தில் அடுத்த உப்பளப் பருவம் துவங்குவதற்கு முன்பு பூர்த்தியாகிவிடும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட் டிருந்தது. அந்த வேலையின் முன்னேற்றத்தை திருநெல்வேலி கலெக்டர் கண்காணித்து வருகிருர். திருநெல்வேலி கலெக்டரிட மிருந்து இறுதி அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை.